# இந்தியாவிலேயே முதன்முறையாக சென்னை நுங்கம்பாக்கத்தில்

# கோத்ரேஜ் நிறுவனம் சார்பில் வீட்டுக்கான எலெக்ட்ரானிக் பாதுகாப்பு கருவிகளின் அங்காடி

## ரூ.4 ஆயிரம் முதல் ரூ.8 லட்சம் வரை பொருள்கள் அணிவகுப்பு



சென்னை, ஏப். 20–

நுங்கம்பாக்கத்தில், கோத்ரேஜ் நிறுவனம் சார்பில் வீட்டிற்கான எலெக்ட்ரானிக்பாதுகாப்புகருவிகளின் அங்காடி திறக்கப்பட்டுள்ளது.

சென்னை நுங்கம்பாக்கத்திலுள்ள இஸ்பானிக் சென்டரில், இந்தியாவிலேயே முதன்முறையாக, கோத்ரெஜ் நிறுவனம் சார்பில், வீட்டு பாதுகாப்புக்காக, பல்வேறு நவீன நுண்ணறிவுக் கருவிக்ளின் அங்காடி இன்று திறக்கப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழாவில் கலந்துகொண்ட கோத்ரேஜ் செக்யூரிட்டி சொல்யூசன்ஸ் மார்க்கெட்டிங், விற்பனை, கண்டுபிடிப்புகள் பிரிவின் துணைத் தலைவர் மெர்னோஷ் பித்தவல்லா கூறியதாவது:–

### 4 வகைகளில் கருவிகள்

சீர்மிகு வீடுகளுக்கான உயர்தொழில் நுட்ப பாதுகாப்பு தீர்வுகளை அளிக்கும் வகையில், இந்தியாவிலேயே முதன்முறையாக, சென்னையில் "செக்யூரிட்டி எக்ஸ்பீரியன்ஸ் ஸோன்" இன்று திறக்கப்பட்டுள்ளது. இதில், வீட்டிற்கான மின்னணு பாதுகாப்பு தீர்வுகள், வீட்டு பாதுகாப்பு லாக்கர்கள், வைபை சார்ந்த வீட்டு பாதுகாப்பு அமைப்புகள், தீ பாதுகாப்பு மற்றும் வர்த்தக லாக்கர்கள் என, 4 வகையான பிரிவுகளை உள்ளடக்கிய பல்வேறு கருவிகளை வைத்துள்ளோம்.

இதில் வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ப, ரூ. 4 ஆயிரம் விலை தொடங்கி ரூ.8 லட்சம் வரையிலான பல்வேறு நுண்ணறிவு சார்ந்த நவீன கருவிகள் உள்ளன. கேமரா, அலாரம், சென்சார் ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்ட இந்த கருவிகள், அருகில் செல்பவர்கள் பற்றிய விவரங்களை, வீட்டின் உரிமையாளருக்கு உடனடியாக படங்கள் எடுத்து அனுப்பி தெரிவிக்கும். மேலும், குறுஞ்செய்தி, அலாரம் உள்ளிட்ட பல்வேறு வகையில் எச்சரிக்கை சமிக்சைகளை அளிக்கும்.

### 25 சத வளர்ச்சி இருக்கும்

இந்தியாவிலேயே வளர்ச்சி பெற்ற நகரங்களில் சென்னை முதன்மையான இடத்தில் இருப்பதால், சென்னையை முதலில் தேர்ந்தெடுத்தோம். அடுத்து ஐதராபாத் உள்ளிட்ட இந்தியாவின் 10 க்கும் மேற்பட்ட பெருநகரங்களில் அடுத்தடுத்து துவக்க உள்ளோம். இந்தியாவில், பாதுகாப்பு தொடர்பான எலெக்ட்ரானிக் பொருள்களின் வளர்ச்சி 50 சதவீதம் அளவுக்கு உள்ளது. கடந்த ஆண்டு பணமதிப்பு நீக்கம் உள்ளிட்ட பாதிப்புகளால் 10 சதவீத வளர்ச்சி மட்டுமே இருந்தது. நவீன பொருள்களின் அறிமுகம், வாடிக்கையாளர்களிடம் உள்ள விழிப்புணர்வு காரணமாக, இந்த ஆண்டு 25 சதவீத வளர்ச்சி இருக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

கடந்த ஆண்டு ரூ.220 கோடி அளவுக்கு வீட்டு பாதுகாப்பு பொருள்களின் வர்த்தகம் இருந்தது. இந்த ஆண்டு ரூ.270 கோடி அளவுக்கு வர்த்தகம் இருக்கும் என எதிர்பார்க்கிறோம். மேலும், இந்தியாவின் 250 க்கும் மேற்பட்ட இரண்டாம் நிலை நகரங்களிலும் விரிவு படுத்த திட்டமிட்டுள்ளோம். மேலும், அமேசான், பிலிப்கார்ட் உள்ளிட்ட இணைய விற்பனை நிறுவனங்களிடையேயும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

### எளிதாக கண்காணிக்கும்

நுகர்வோர்கள், நாங்கள் பாதுகாப்பாக இருக்கிறோம் என்று உணரும் வகையில், நாமாகவே செயல்படுத்தும் பாதுகாப்பு கேமராக்கள், உரிமையாளர்கள் எங்கிருந்தாலும் எளிதாக கண்காணிக்கும் அமைப்புகளும் உள்ளன. அனைத்துமே, செல்போன் செயலி மூலம் இயங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. பாதுக்காப்பு தொடர்பான கருவிகள் தயாரிப்பு மற்றும் சந்தைப்படுத்தலில் கோத்ரேஜ் இந்தியாவிலேயே மிகப்பெரிய இடத்தை வகிக்கிறது.

மேலும், அரசுத் துறை நிறுவனங்கள், வங்கிகள், பன்னாட்டு பெருநிறுவனங்கள் போன்றவற்றுக்கு கோத்ரேஜ் செக்யூரிட்டி சொல்யூசன்ஸ் நிறுவனம் தனது பாதுகாப்பு தொடர்பான கருவிகளை அதிக அளவில் வினியோகித்துள்ளது. இதற்காக 'சூப்பர் பிராண்டு' பெருமையும் கிடைத்துள்ளது. மேலும் அமெரிக்கா, ஐரோப்பா, கிழக்கு ஆப்ரிக்க நாடுகள் உள்ளிட்ட 45 நாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்து வருகிறது என்றார்.